# இந்தியனின் ஏக்கம்





எங்கும் இறைவனைத்தேடும் மனமும் இதயமும் பெற்றவன் இந்தியன்; அதனால், தன்னைக்காக்கும் தெய்வங்களை உருவாக்கி, அன்பிற்காக ஏங்குகின்றான். அன்பின் வடிவமாகிய தெய்வத்தை யார் இவனுக்கு காட்டுவார்கள்?

அன்பைத்தேடி பல காலங்கள், ஊர் ஊராய்ப்பயணம் போகும் இந்தியனுக்கு இறைவனைக் கண்களால் பார்க்க வெகு ஆசை. உண்மையைச்சொன்னால், அவன் நம்புவது தாய்-தந்தை உறவையே. அதுவே தன்னை உலகிலே ஒரு மனுஷ பிறவியாக்குகிறது என்று நினைத்து, பக்தியாய் காலத்தை செலவிடுகின்றான். அவன் உணராமல் இருப்பது, சரீரத்தை உருவாக்கும் அதிகாரத்தை மனுஷர் தேவனிடமிருந்து பெற்றிருப்பதை.

டிஜிட்டல் கேமெராக்கள் இல்லாத ஒரு காலத்தில், தன் குடும்ப வாழ்க்கையை தொடங்கியவன் முதல் மனுஷன். கைனாகாலஜிஸ்ட் இல்லாமல் உலகில் நடந்தது முதல் சுகப்பிரசவம், பிறந்தவன் கெய்ன்; அடுத்தவன் ஆபேல்.

இன்றோ எத்தனை சிசேரியன்கள்!



மனித அறிவின் வளர்ச்சி, அவனுக்கு பல பிரச்சினைகளத்தான் தோற்றுவித்துள்ளது. ஏன் தெரியுமா?

ஆத்துமாவின் தேவையற்ற ஆசைகளே அதற்குக் காரணம். கண்களினால் ஆசைகளை பெற்றுக்கொள்ளும் ஆத்துமா, அவை நிறைவேறும் வேளையில் திருப்தியடைகிறது; ஆனால் வேறு ஒரு ஆசை வந்து பற்றிக்கொள்ள, அதையடையும் நோக்கத்தில் பயணத்தை மறுபடியும் அதன் பாதையில் தொடருகின்றது.



வேடிக்கையான வாழ்க்கை மனுஷருடையது.

ஆத்துமாவின் தேவை ஆண்டவரின் துணை; அந்த இரட்சகரே (இயேசு) இந்த புனித வடிவத்தை உருவாக்கியவர். ஆத்துமா அறிவுள்ள ஆவியின் வடிவம். வார்த்தைகளை கற்று, வாழ்க்கை என்ற பாடத்தை உண்டாக்கும் அமைப்பு; உணர்வுகளையும், உணர்ச்சிகளையும் நமக்குள்ளே தோற்றுவிக்கும் ஊற்று.

எந்த வார்த்தைகள்! யாருடைய வார்த்தைகள்!

இது பெரிய கேள்வி; ஆனால் நமது குணங்களே அதற்கு பதில்கள். பொறாமை, எரிச்சல், கோபம், சுயநலம், விபசாரம், பொய், போன்ற தீய குணங்கள் சாதரணமாகிப்போன இந்த தேசத்திலே, காணிக்கை லஞ்சமாகி, கோவில்களிலே கூட்டங்கள் ஏராளமாக இன்று கூடுகின்றது.



இந்தியன் எதை தேடுகின்றான்!

இன்னும் ஏதோ ஒன்று அவனுக்கு கிடைக்காமல் இருக்கின்றது. அது ஆத்ம திருப்தியா! இல்லை ஆத்ம சமாதானமா!

ஆத்மாவின் திருப்தி தேவனது வார்த்தைகளில் உள்ளது; ஆத்மாவின் சமாதானம் அவர் கிருபையில் (மாறாத அன்பில்) உள்ளது.

வார்த்தைகளை கற்றுக்கொள்ளும் இதயம் பேசும்; ஊமையனும் தனக்குள்ளே பேசுகிறான் என்பது உண்மையே. ஆனால் மனுஷன் யாரைப்போல பேசுகிறான்!

மனுஷரின் பேச்சு வீறாப்பும், பெருமையும், பொறாமையும், வஞ்சகமும் கலந்த கலவை; இவைகளை சரியான விகிதத்தில் கலக்க கற்றுக்கொண்ட புத்திசாலிகள் தேசத் தலைவராகிறார்கள்.

பிடிக்காத விஷயத்தை பிடித்தது போல பேசவும், நல்ல விஷயத்தை (நற்செய்தி: இயேசு மனுஷரை நேசிக்கின்றார்) உதறித்தள்ளவும், தேவன் கொடுத்த அதிகாரத்தை (மனசாட்சி) தவறாய்ப்பயன்படுத்தவும், துன்மார்க்கனிடம் (சாத்தானிடம்) கற்றுக்கொண்டவர்கள் மனுஷர்கள்.

தேவன் இல்லாத மனித வாழ்க்கை, ஒளியில்லாத அறை; அங்கே இருளில் செய்யப்படும் கிரியைகள், அன்பினால் அல்ல, ஆசையினால் நடத்தப்படுகிறது.



இந்நிலை எதனால் வந்தது?

மனித ஆவி குழந்தையாக அவதரிக்கும் காலத்தில், அதற்கு மதமுமில்லை, ஜாதியுமில்லை, மொழியுமில்லை; ஏனென்றால் அதில் வார்த்தையில்லை. முதலில் சத்தத்தை தாயிடமிருந்து கற்றுக்கொள்ளும் மழலை, பிறகு தந்தை, உற்றார் என்று தொடங்கி, முடிவில் சமுதாயத்திடம் தஞ்சமடைகிறது.

ஒரு குழைந்தை படிக்கும் வார்த்தைகள், அதற்குள் எண்ணங்களை பிறப்பிக்கின்றது. பிறகு எண்ணங்கள் செயல்களாக சிந்தனை வாழ்வு தொடர்கின்றது.



யாரைப்போல சிந்திக்கின்றோம்?

பலரிடம் வார்த்தைகளைக் கற்றுக்கொள்ளும் குழைந்தை, பலவித குணங்களையுடையதாய் பரிணாமம் அடைவதால், பலதெய்வ வழிபாட்டு முறைமைகளை தாரளமாய் ஏற்றுக்கொள்கிறது. அப்படியில்லாமல், ஆவியைத்தந்த இயேசு ஒருவரிடம் தேவ வார்த்தைகளை நாம் கற்றுக்கொள்ளும்போது, தேவ சாயலும் ரூபமுமான, அந்த மாபெரும்

தெய்வத்தைப்போல மனமாற்றம் அடைந்து, தெய்வீக குணங்களை பெற்றுக் கொள்ளுகிறோம்.

குழந்தையின் ஆவி தேவனிடமிருந்து வருகின்றது. தாயின் கருவறை இருளாய் இருந்தாலும், ஒளியான ஆவி அங்கே பிரவேசிப்பதால், அவளின் முகம்

கருவுற்றிருக்கும் வேளையில் பூவைப்போல மலர்ந்து காணப்படும். இதையறியாத இந்தியன் இருளில் தீபத்தை ஏற்றி, தெய்வத்திற்கு வெளிச்சம் காட்டி தன் பக்தியை வெளிப்படுத்துகின்றான்.

ஒருவரும் சேரக்கூடாத ஒளியில் வாசம் செய்யும் தேவனாகிய கர்த்தர், தமது ஒரேப்பேரான குமாரனாகிய இயேசு கிறிஸ்துவை இந்த உலகத்திற்கு ஒளியாக அனுப்பினார். தேவ வார்த்தையாக வந்த இயேசு, இஸ்ரவேல் கோத்திரத்தில் பிறந்து, இருளில் வாழும் நம்மெல்லாருக்காகவும் மரித்து, நாம் இருளில் நடப்பித்த கிரியைகளுக்கு தண்டனையை, கல்வாரி சிலுவையில் ஏற்றுக்கொண்டார்.



இந்தியனுக்கு இஸ்ரவேலின் தேவன் எப்படி
சொந்தமாகமுடியும்?
யார் இந்த இஸ்ரவேலன்?

ஆபிரகாம் என்ற மனுஷனை தேவன் பேர் சொல்லி அழைத்தபோது, அவன் ஒரு விக்கிரக ஆராதனைக்காரனாகத்தான் இருந்தான்; அதாவது தன் முன்னோர்களை வணங்கிவந்தான். தேவன் வானத்திலிருந்து பேசிய நாளிலிருந்து அவன் அறிந்து கொண்ட சத்தியம், 'தேவன் மோட்சத்தில் வசிக்கின்றார்' என்று. அன்றுமுதல் அவன் எபிரேயனான். இவன் பேரன்தான் யாக்கோபு; எத்தனான (அண்ணனை ஏமாற்றியவன்) இவனை ஆண்டவர் சந்தித்து பேசிய இடத்தில், ஒரு கல்லை அடையாளமாக வைத்து, தலைக்குத்தடவும் எண்ணையை அதில் தடவி தன் பக்தியை வெளிப்படுத்திவிட்டு, தன் சுயகுணங்களோடு நம்மைப்போல தன் வாழ்க்கைப் பயணத்தை தொடர்ந்தான். ஒரு நாள் மறுபடியும் தேவன் அவனை சந்தித்தார்,

எத்தன் என்ற பெயரை (யாக்கோபு), தெரிந்து கொள்ளப்பட்டவன் என்று அர்த்தம்கொள்ளும் இஸ்ரவேல் என்று மாற்றினார். பூமியில் வாழும் யாவரும், தேவனை ஏமாற்றி, அவருக்குச் சேரவேண்டிய துதியையும், கனத்தையும், மரியாதையையும் கொடுக்காமல் இருக்கும் யாக்கோபுக்கள்தான் (எத்தன்கள்). நம்மைத் தேடித்தான் அந்த ஒளியான இயேசு வருகின்றார். எதற்காக? இஸ்ரவேலனாக தெரிந்து கொள்வதற்காக.

நமது ஆவி ஒளியான ரூபமுடையது. அதில் இயேசுவின் வார்த்தைகளை எழுதும்போது தேவனது சாயல் (அன்பு) வெளிப்படுகின்றது. ஆம், தேவன் அன்பாகவே இருக்கின்றார். வேறு எந்த வார்த்தைகளை எழுதினாலும், தேவனற்ற வாழ்க்கையை அது தெரிந்து கொள்கின்றது. அதனால் இந்த உலகிலே வாழ்க்கை இரண்டு வகைகளாக பிரிந்து காணப்படுகிறது.

1) தேவனுக்குள் வாழ்வது (Godly)
2) தேவனற்று வாழ்வது (Ungodly)



அறியாமலும், உணராமலும் நாம் கற்றுக்கொள்ளும் மாயமான வார்த்தைகள்:

* சினிமா
* சீரியல்
* மனுஷரின் கற்பனையில் விளைந்த கதைப்புத்தகங்கள்
* புராணக்கதைகள்

மற்றும் பல.

இவைகள், நம் வாழ்க்கையை தேவனது துணையின்றி வாழத்தூண்டுகின்றது. ஆனால் ஆவி நிரந்தரமாக நம் சரீரத்தில் வாழ முடியாத சூழ்நிலையில், சரீரம் அழிவான ஒரு நிலையை அடைவதால், பயம் சூழ்ந்து, தெய்வம் என்ற போர்வையில், கடவுளின் எதிரியான சத்துருவின் வஞ்சனையில் விழுந்து போகின்றோம்.

இவன் நம் ஆத்துமாவை அழிப்பவன்; அதனால் வாழ்ந்து கொண்டு இருப்பவன். தேவன் யார் என்று அறிந்தவன்; இருந்தும் அவருக்கு மரியாதை

செலுத்தாமல் இருப்பவன். அதினால் மோட்சத்தைவிட்டு துரத்தப்பட்டவன். இவனோடு சேர்ந்தவர்கள் கோடிக்கணக்காண தூதர்கள் (தேவர்கள்). இவர்கள் வாழவழியின்றி அலையும் பிறவிகள்.

இவர்களுக்கு நாம் ஆராதனை செலுத்தலாமா (வணங்கலாமா)?

இவர்கள் ஆவி உருவமுடையவர்கள்; அதனால் மனுஷர், மிருகம், பறவைகளின் உருவங்களைத் தங்களுக்கென்று எடுத்துக்கொள்கிறார்கள். இவர்கள் மனித மனங்களில், தங்களது நினைவுகளை விதைக்கின்றார்கள். அதைப்பெற்றுக்கொள்ளும் மனித இதயம், விக்கிரமாக அந்த நினைவுகளை மாற்றுகிறது. அதனால் அந்த இதயம் கடினமாகி, தனது சொந்த இச்சைகளை நிறைவேற்ற, சுய நல வாழ்க்கையைத் தேடுகின்றது.

கடவுளை அறிந்து கொள்ளும் அறிவும், உணர்வும், தேவ அன்பிலே உள்ளது. அந்த தேவ அன்பாக உலகில் வந்தவர்தான் நமது இரட்சகரான கிறிஸ்து இயேசுவானவர். பிதாவாகிய தேவன் இவரை பூமிக்கு அனுப்பியபோது, நம்மெல்லாருக்காவும் மரிக்கப்போகிற ஒரு ஜீவபலியாகத்தான் இயேசு வந்தார். இவரது மரணத்தினால், தீமை நம்முடைய வாழ்விலிருந்து நீக்கப்பட்டு, நன்மைமாத்திரம் தங்கும்படி, ஒரு சத்தியபாதை உருவாகியுள்ளது.

மோட்சத்திலிருந்து துரத்தப்பட்ட தூதர்கள், மனுஷர்களை பலவிதமான கட்டுகளினால் கட்டியுள்ளார்கள். ஒவ்வொரு மனுஷனும், ஏதாவது ஒரு பாவக்கயிற்றினால் கட்டப்பட்டு, அதிலிருந்து மீள வழி தெரியாமல் வாழ்க்கையை கழித்து இந்த பூமியை கடந்து போகின்றான்.

சாத்தான் கட்டும் பாவக்கயிறுகள்:



* மதம்

* ஜாதி

* நிறம்

* கலாச்சாரம்

* மொழி
* வியாபாரம்
* படிப்பு
* வேலை
* அதிகாரம்
* தீய பழக்கங்கள்
* பொழுது போக்கு அம்சங்கள்



மற்றும் பல.

கடவுளை கண்ணால் பார்க்கும்படி தூண்டும் இந்த சாத்தானின் தூதர்கள், விக்கிரக வழிபாட்டு முறைமைகளை ஊக்கப்படுத்துகின்றனர். தன் வாழ்நாள் முழுவதையும் இந்த வழிபாட்டு முறைகளில் செலவிடும் ஒருவனின் வாழ்க்கை (ஆத்துமா), தேவ சாயலை முற்றிலும் இழந்து, தேவனுடைய ஒளியைவிட்டு பிரிந்துபோய், இருளின் இராஜ்ஜியத்தில் நித்தியமாக சேர்கின்றது.

கடவுள் நம்மை சந்திக்க விரும்புகின்றார். அதற்கு நாம் செய்யவேண்டியது என்ன?

1) மகிழ்ச்சியோடு நீதியை நடப்பிக்க வேண்டும்

2) அவருடைய சத்தியப்பாதையில் வந்து, அவரின் நினைவோடு காத்திருக்கவேண்டும்.

அப்பொழுது அவர் நிச்சயம் நம்மை சந்திப்பார்; அவர் வாக்குமாறாதவர். வானமும் பூமியும் ஒழிந்துபோகும், அவருடைய வார்த்தைகள் நித்திய காலமாய் நிலைத்திருக்கும்.

தேவனுடைய வார்த்தைகள், சத்திய வேதத்தில் (பைபிள்) கொடுக்கப்பட்டுள்ளது. இஸ்ரவேலர் என்ற கோத்திரத்தார் அதைப்பெற்றுக்கொண்டார்கள். கிறிஸ்துவின் சிலுவை மரணத்தின்மூலம் இவை யாவருக்கும் சொந்தமாயின. கர்த்தருடைய வார்த்தைகள், நம்

இருதயத்தின் நினைவுகளை சுத்தமாக்கி நற்குணங்களை வளர்க்கின்றது. அதனால் இருள் நீங்கி வெளிச்சம் புறப்படுகின்றது.

ஆத்துமாவின் தாகத்தை தேவனது வார்தைகள் தீர்த்துவைக்கின்றது. இந்த வார்த்தைகளில் வளரும் ஆத்துமா, தேவனின் சாயலை தரிப்பித்துக் கொள்ள, தேவ ஆவியானவர் உதவுகின்றார். ஒருவன் கிறிஸ்துவுக்குள் இருந்தால், அவன் புது சிருஷ்டியாய் இருக்கின்றான். இது மதமாற்றம் அல்ல, மனமாற்றமாகும். பழைய வாழ்க்கையை (கெட்ட குணங்களை) மறந்து, புதிய வாழ்க்கையை சந்தோஷமாக தொடருகின்றான். ஒருவன் தன்னை நீதிமான் என்று நினைத்து, பாவியை நீதிமானாய் மாற்றுகிற, இயேசுவை இன்று ஒதுக்கினால், நீதிபரராகிய தேவனை, நியாயத்தீர்ப்பின் நாளில் சந்திக்கப்போகிறான். வேதம் இப்படிச்சொல்கின்றது:

‘‘தன் பாவங்களை மறைக்கிறவன் வாழ்வடையமாட்டான், அவைகளை அறிக்கை செய்து விட்டு விடுகிறவன் எவனோ, அவன் தேவனின் இரக்கத்தை (பாவமன்னிப்பை) பெற்றுக்கொள்கிறான்’’.

இந்தியனே இயேசுவின் இரக்கத்தை பெற அவரிடம் சேர்ந்திடு. தேவன் ஒளியாக இருக்கின்றார். இயேசுவே அந்த உலகத்தின் ஒளி.

ஆமென்,

கர்த்தருக்கு ஸ்தோத்திரம்.





இயேசுவின் குடும்பம் ஊழியங்கள்